MACHINE MINDER - RAMESKARAN. S/G - R. JESUTHASAN.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 04 செவ்வாய்க்கிழமை (19-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 23

சாவ் போட்டிகள் ஆரம்பமாகவிருந்த வேளை

# ஸ்ரீலங்கா அணியினருக்கு எதிராக சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம்!

## கோபாலசாமி தலைமையில் நடந்தது

சென்னை. டிசம்பர் 19

சார்க் நாடுகளின் விளையாட்டு அணிகள் பங்குபற்றும் ஏழாவது ''சாவ்'' விளையாட்டு விழா சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நேற்று மாலை கோலாகலமாக ஆரம்பமாக இருந்த வேளை —

அதில் கலந்து கொள்ளும் ஸ்ரீலங்கா அணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் கறுப்புக் கொடிகளைத் தாங்கியவாறு ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகக் கோஷமிட்டனர்,

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் ஜவஹர்லால் விளையாட்டரங்கில் நேற்று மாலை 3-45 மணியளவில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா முன்னிலையில் பிரதமர் நரசிம்மராவ் ''சாவ்'' விளையாட்டுப் போட்டியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அவ்வேளை சனநெருக்கடி மிகுந்த சென்னை தங்கசாலைப் பகுதியில் திரண்ட ம. தி. மு. க. தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

''சாவ்'' போட்டிகளில் ஸ்ரீலங்கா அணி கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டதை ஆட்சேபித்து அவர்கள் கண்டனக் குரல் எழுப்பியவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

கறுப்புக் கொடிகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டம் நடத்திய பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தலைமை வகித்தார்.

ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்யும் இலங்கை இராணுவத்துக்கு உதவி வருவதாகக்கூறி பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டப்பேரணியால் சென்னை நகரின் பல வீதிகளில் போக்குவரத்து தடைப்பட்டது.

தங்கசாலைப் பகுதியில் ஆரம்பமான பேரணி 'சாவ்' போட்டிகள் நடைபெறும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சகிக்க முடியாத கொடுமை என்கிறார் கோபாலசாமி

லண்டன், டிச.19

''ஈழத் தமிழ் மக்களைக் கொன்று குவித்து, அங்கே இரத்தமும், கண்ணீரும் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும் போது, அந்தப் படுகொலையைச் செய்த சிங்கள அரசாங்கம் அனுப்பியுள்ள அணியை தமிழ்நாட்டின் தலைநகரத்திலே விளையாட அனுமதிப்பது என்பது சகிக்க முடியாத கொடுமை.''

மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி பி. பி. ஸிக்கு மேற்கண்டவாறு கூறினார்.

தென்னாபிரிக்காவை பல ஆண்டு காலம் உலகம் விளையாட அனுமதிக்கவில்லை.

தென்னாபிரிக்காவின் விளையாட்டு வீரர்கள் திறமைசாலிகள் தான் அவர்கள் ஒன்றும் கொலை செய்யவில்லை. ஆனால் தென்னாபிரிக்கா அணியை விளையாட அனுமதிக்காததற்குக் காரணம் அவர்களின் அரசு இன ஒடுக்கல் கொள்கையை கடைப்பிடித்தது தான்

இனப்படுகொலை செய்கின்ற ஓர் அரசு அனுப்புகின்ற பிரதிநிதிகளை தமிழ்நாட்டின் தலைநகரில் அனுமதிக்க முடியாது

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## தமிழீழ மீட்புநிதிக் கடன் ஜனவரி 6 முதல் மீளளிப்பு

சாவகச்சேரி, டிச. 19

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிக்கப்படவிருக்கும் இடங்கள் பற்றிய விவரங்களை விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் ஆறாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை பல்வேறு இடங்களில் வைத்து இந்த மீளளிப்பு இடம் பெறவிருக்கிறது.

(விவரம் 5ஆம் பக்கத்தில்)

## தேசத்துரோகி ஒருவருக்கு புலிகள் மரணதண்டனை

திருகோணமலை, டிச. 19

தேசத்துரோகி ஒருவருக்கு கடந்த 16 ஆம திகதி விடுதலைப்புலிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

மல்லிகைத்தீவு மணற்சோலையைச் சேர்ந்த ஆசீர் ஆண்டியக்கட்டி அல்லது பாண்டிராசா என்பவருக்கே விடுதலைப்புலிகளால் அவரது வீட்டில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

போராளிகள் தங்கியிருக்கும் இடங்களுக்கு இராணுவத்தினரை கூட்டிவந்து மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதில் பல போராளிகள் வீரச்சாவடைவதற்கும், மக்கள் இறப்பதற்கும் இவர் காரணமாக இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-7)

## படையினர் பயணம் செய்த டிராக்டர் அமுக்க வெடியில்

### குப்பிளானில் இருவர் காயம்

கொழும்பு, டிச. 19

பலாலிக்கு தெற்கே குப்பிளான் பகுதியில் பாதுகாப்புப் படையினர் பயணம் செய்த டிராக்டர் ஒன்று விடுதலைப் புலிகளின் அமுக்கவெடியில் சிக்கியது.

நேற்று முன்தினம் நடந்த இந்த சம்பவத்தில் டிராக்டரில் பயணம் செய்த இரண்டு படையினர் காயம் அடைந்தனர் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

பலாலி ஆதார வைத்தியசாலையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தமிழ் அரசியல் கட்சிகள் இவ்வாரம் மீண்டும் சந்திப்பு

கொழும்பு, டிச. 19

கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்த 9 தமிழ் அரசியல்கட்சிகளும் இவ்வாரம் மீண்டும் கூடி ஆராய உள்ளன.

வடபகுதி யுத்தம் பற்றியும் கொழும்பிலும் மற்றும் பகுதிகளிலும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது குறித்தும் தமிழ் அரசியல் கட்சிகள் விவாதிக்கும் என்று திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 9 கட்சிகள் கூட்டணியில் ஈ. பி. டி. பி.யைச் சேர்க்க எடுக்கப்பட்ட முயற்சி பயன்அளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

## சிறுமி மீது படையினர் சூடு!

திருகோணமலை, டிச. 19

திருகோணமலை மாவட்டத்தில் சின்னக்குளம், இத்திக்குளம் காட்டுப் பகுதிக்குள் இறங்கிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விறகு பொறுக்கிக் கொண்டிருந்த கிரவல்குழி கிராமத்தைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுமி ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

காலில் காயமடைந்த அந்தச் சிறுமியை தம்முடன் அழைத்துச் சென்ற இராணுவத்தினர் தாம் கொக்குத்தொடுவாயில் சுட்டதாக தெரிவித்தனராம்

(இ-?)

## பிராந்திய சபையை தன் விருப்பப்படி கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு!

### அதிகாரப்பரவலாக்கல் சட்டவரைவில் திருத்தம் வரும்

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பிராந்திய சபைகளை தாம் விரும்பிய நேரத்தில் கலைத்துவிடவும், அதன் முதலமைச்சரைத் தாம் விரும்பிய நேரத்தில் பதவிநீக்கம் செய்யவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் வகையில் சட்ட வரைவில் திருத்தம் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

நம்பத்தகுந்த வட்டாரங்களை ஆதாரம் காட்டி ''சண்டே ஐலண்ட்'' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

விரைவில் வெளியிடப்படவுள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனையின் சட்ட வரைவில் இத்திருத்தத்தைச் செய்ய அரசு உத்தேசித்துள்ளது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசினால் அதிகாரப் பரவலாக்கல் திட்ட யோசனைகள் வெளியிடப்பட்ட போது. பெரும் பான்மை பலத்தைக் கொண்டிருக்கும் வரை பிராந்திய சபைகளைக் கலைக்கவோ அல்லது முதலமைச்சரைப் பதவி நீக்கம் செய்வதற்கோ ஜனாதிபதிக்கு அதில் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [ஐ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

*யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் நல்லூர்க் கிளை*

தென்மராட்சி கிளை அலுவலகத்தில் 23- 12- 95 சனிக்கிழமை பகல் 10 மணியளவில் நல்லூர் கிளையின் சகல அங்கத்தவர்களும் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

தலைவர்
நல்லூர்க் கிளை

விலாசம்
தென்மராட்சிக்கிளை,
கண்டிவீதி,
சாவகச்சேரி.

(39548)

# பிற்போடப்பட்டுள்ளது

மக்கள் நலன்புரிச் சங்கத்தினால் 06-11-95இல் நடத்தப்படவிருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்,
மக்கள் நலன்புரிச் சங்கம்,
தலைமையகம்,
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

தற்போதைய முகவரி:
கண்டி வீதி,
மக்கள் வங்கிக்கு
அருகாமை,
சாவகச்சேரி.

(39546)

# அறிவித்தல்

## காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

*எமது சங்கத்தின் கிளைகள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன.*

| வலயம் | கிளையின் விலாசம் |
|---|---|
| 1. கைதடி | கண்டி வீதி, நுணாவில். |
| 2. மட்டுவில் | இந்து மகளிர் கல்லூரி வீதி, கற்குழி (கல்வயல்) |
| 3, சாவகச்சேரி | அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாக, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 4. கொடிகாமம் | அ. கொடிகாமம் சந்தி. ஆ. கச்சாய் அம்மன் கோவில் கச்சாய். |
| 5. வடமராட்சி பிரதேச செயலர் பிரிவுகள் | கொடிகாமம் வீதி சந்தி, மந்திகை. |

காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த பாவனையாளர்களும் சங்கத்தின் அங்கத்தவர்களும் அவ்வவ் பிரதேசங்களில், வலயங்களில் அமைந்துள்ள எமது சங்கக் கிளைகளில் தொடர்பு கொண்டு தமது பெயர் விவரங்களை பதிவுசெய்து கொள்ளுமாறும் எதிர் காலங்களில் கிடைக்கக்கூடிய 'பங்கீட்டுப் பொருள்களை தவறாது பெற்றுக்கொள்வதற்கு வசதியாக பதிவு செய்து ஒத்துழைக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொது முகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.

(39650)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்: 25-12-1900



விண்ணுலகில்: 19-12-1995

## அமரர் இளையதம்பி கனகசபாபதி

என்றும் எங்கள் உள்ளத்தில்
இனிதாய் வாழ்ந்து வழிநடத்திச்
சென்றாய் அப்பா, உன் பிரிவு
சிறிதும் சகியோம் ஆனாலும்
வென்றாய் வாழ்வில்; நற்சேவை
வியக்கும் வகையில் செய்தாயே
அன்புக்குரிய அப்பா உன்
ஆத்மா சாந்தியடையட்டும்.

19 - 12 - 1995 இல் நடைபெறும் வீட்டுக் கிரியைகளில் பங்குபற்றுவதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

கருவேம்பன் வளவு,
இராச வீதி,
திருநெல்வேலி.

தற்போதைய முகவரி:
(அம்பாள் ஸ்ரோர்ஸ் அருகாமையில்
கரம்பைக் குறிச்சி, வரணி.)

(39601)

## முதன்மை ஆசிரியர்கள் கலந்துரையாடல்

சாவகச்சேரி, டிச. 19

வலயம் இரண்டைச் சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கரவெட்டி புனித இருதயக்கல்லூரியில் சந்திக்குமாறு வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க கந்தசாமி கோரி உள்ளார். (இ)

## வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

சாவகச்சேரி, டிச. 19

ஸ்ரீலங்கா இராணுவத்தின் சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது விழுப்புண் ஏற்று சிகிச்சையின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை மதிச்செல்வனின் (சிதம்பரநடராசா ஜெயக்காந்த், அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை) வித்துடல் இன்று செவ்வாய்க்கிழமை வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு புனித விதை குழியில் விதைக்கப்படும். (இ)

## சங்கீதம் செயன்முறை பரீட்சை

சாவகச்சேரி, டிச. 19

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் சங்கீத செயன்முறைப் பரீட்சை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதி அட்டைகளைப் பரீட்சார்த்திகள் பயன்படுத்தலாம் என்றும்—

பரீட்சை நடைபெறும் கால அட்டவணை விவரத்தை நாளை புதன்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், கரவெட்டியில் இயங்கும் வலயம் இரண்டு பணிமனையிலும் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொள்ளலாம் என்றும் வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## ஒஸி குழு ஐ. தே. க.வுடன் இணையும்

கொழும்பு, டிச. 19

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி [ஒஸி பிரிவு] இவ்வாரத்தில் ஐ.தே.கவுடன் உத்தியோக பூர்வமாக இணைந்துகொள்ளும் என்று அறிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.தே.க. மாநாட்டில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் குழு ஒன்று அதன் தலைவர் சரத்கொங்கசுகே தலைமையில் கலந்து கொண்டது. (உ)

## ஹபரணவில் சவர்க்காரம்

சாவகச்சேரி, டிச. 19

இன்று காலை பருத்தித்துறைக்கு வரும் ஹபரண கப்பலில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்க 40 மெற்றிக் தொன் சவர்க்காரம் மற்றும் உதவிப் பொருள்கள் எடுத்து வரப்படவிருக்கின்றன.

ஆயிரம் மெற்றிக் தொன் மா, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் மூவாயிரம் கூரைபொலித்தின், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் நிவாரணப் பொருள்கள் ஆகியவையும் இக்கப்பலில் எடுத்துவரப்படுகின்றன. (இ-3-7)

## லங்காமுடிதவிலிருந்து பொருள் இறக்கப்படுகிறது

சாவகச்சேரி, டிச. 19

''லங்கா முடித'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலை பருத்தித்துறையில் நேற்று ஆரம்பமானது.

அதே சமயம் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த 'லங்கா கல்யாணி'' நேற்று கொழும்பு திரும்பியது.

மண்ணெண்ணெயுடன் வடக்கு நோக்கி வந்த ''மாஹோ'' கப்பல் திருகோணமலையில் தற்போது தரித்து நிற்கிறது (இ-3)

# அலுவலக தளபாடங்கள் தேவை

எமதுசெயலகத்திற்கு பின்வரும் தளபாடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதால், இதனை உடனடியாக வழங்கக்கூடிய பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள், மற்றும் தளபாட விற்பனையாளர்கள் மேலதிக அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

01) பதவிநிலை உத்தியோகத்தர் மேசை.
02) எழுதுநர்கள் மேசை.
03) அலுவலக் கதிரைகள்.
04) சிற்றூழியர் கதிரைகள்.
05) உருக்கு அலுமாரிகள்.

செ. பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

18- 12- 1995

(C/3056)

# சாவகச்சேரி நகராட்சிமன்றம்

# ஆதனவரி அறிவித்தல்

1996 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31-01-1996 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோர்களுக்கு அவ்வருட மொத்த வரியில் 10 வீதம் கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குரிய வரியை அக்கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5 வீதம் கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறினால் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக்கட்டணமாக வரியுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31-01-1996 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக முழுமையாக இக் காரியாலயத்தில் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:-

1. 1995 ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 1996 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.
2. சேதமடைந்ததும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31-01-1996 க்கு முன் கிடைக்கக் கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சி. நடராசா
செயலாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
15-12-95

(சி-2911)

# மரண அறிவித்தல்

## A. S. M. ஜெயரட்ணம்

கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இருபாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான A. S. M. ஜெயரட்ணம் (கணக்காளர் நீர்வேலி, கண்ணாடித் தொழிற்சாலை), நேற்று (18-12-95) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி அரியதாசனின் அன்பு மகனும், ஜெபசெல்வியின் (ஆசிரியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), அன்புக் கணவனும், ஷமிலா, ஷெரீன் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. திருமதி சுப்பிரமணியத்தின் அன்பு மருமகனும், யோகரட்ணம், தர்மரட்ணம், காலஞ்சென்ற சுகரட்ணம், மற்றும் விமலாதேவி, பத்மாதேவி, விஜயரட்ணம், இந்திராதேவி, எலிசபெத் ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr. ஜெபசௌந்தரி, ஜெபக்குமார், Dr. உமா, நகுலேஸ்வரி நிலானி, திருஞானரட்ணம் (F.I) கமலாம்பிகை, மனோரஞ்சன், ரூபன், தவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை C/o தேவராஜா பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, 2ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் இன்று (19-12-95) காலை 11.00 மணிக்கு நடைபெற்று, பருத்தித்துறை இலங்கை பெந்தெகோஸ்தே சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெயரட்ணம்
(மனைவி)

(39549)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தொடர் தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிடுகின்றனர்

## 'சண்டே லீடரில்' பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிச. 19

எதிர்வரும் நாள்களில் கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் பல்வேறு தொடர் தாக்குதல்களுக்கு இலக்காகும்.

—இவ்வாறு ''த சண்டே லீடர்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பொலீஸ், இராணுவ முகாம்கள் மீது ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருகின்றனர் என்று புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரையை தங்கள் தளமாக புலிகள் மாற்றியுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் சேருவவிலையையும் வாகரையையும் நீண்ட ஒடுக்கமான கடல் பகுதி மட்டுமே பிரிப்பதால் வாகரையில் இருந்து கொண்டு திருகோணமலை மாவட்டத்துக்குள் நுழைவது சுலபம் எனக்கருதி வாகரையை தமது தளமாக புலிகள் மாற்றியுள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் பல வாகனங்களை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனர் என்றும் —

இது, எதிர்காலத்தில் வாகனக் குண்டுத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தப் போகின்றார்கள் என்பதையே காட்டுகின்றது என்றும் —

பாதுகாப்பு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

— இவ்வாறு அந்தச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

(உ)

## தபால் விநியோகம்

தென்மராட்சி, டிச. 19

''லங்கா முடித'' கப்பலில் கொண்டு வரப்பட்ட 350 தபால் பொதிகள் நேற்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கும் யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு உடனடியாக தரம் பிரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அனைத்து தபால் அதிபர்களையும் இன்று பிரதம தபால் நிலையத்திற்கு வந்து தத்தமது பிரிவு தபால்களைப் பெற்றுச் செல்லுமாறு பிரதம தபால் அதிபர் சு. கோடீஸ்வரன் கோரி உள்ளார்.

பொதுமக்கள் தமது கடிதங்களை நாளை புதன்கிழமை முதல் தத்தமது பிரிவு தபால் நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாமெனவும் அவர் தெரிவித்தார். (இ-117)

# அதிகாரப் பரவலாக்கல் விரைவில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, டிச 19

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கென அரசாங்கம் வெளியிட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் விரைவில் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்படும்.

கும்புறுப்பிட்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் உரை நிகழ்த்திய நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினை, இராணுவ ரீதியில் தீர்வு காணப்பட முடியாத ஒரு விடயமாகும்.

சகல சமூகங்களுக்கும் நீதியான முறையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரே வழி.

அதிகாரத்தை பரவலாக்கும் நடவடிக்கைகள் ஜனநாயக ரீதியில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## இனப்பிரச்சினைத் தீர்வு:

# சகலரினதும் ஒத்துழைப்பை கோருகிறார் பீரிஸ்

கொழும்பு, டிச. 19

நாட்டின் தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினையில் தீர்வு காண்பதில் கட்சி வேறுபாடின்றி சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று நீதி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கேட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் நாடாளுமன்ற தெரிவுக்குழு மூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது சகலரும் ஆதரவு வழங்க வேண்டும்.

தனித்து ஒரு கட்சியால் மட்டும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்றும் அவர் கூறினார்.

(இ-3)

# தமிழ்க் கட்சிகளின் பரிசீலனைக்கு சட்டவரைவை முதலில் சமர்ப்பிக்குக

## அரசிடம் கோரிக்கை

கொழும்பு, டிச. 19

உத்தேச அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்ட சட்டவரைவை நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்க முன்னர் தமிழ்க் கட்சிகளின் பரிசீலனைக்கு அவற்றைத் தரவேண்டும் என தமிழ் கட்சிகள் அரசை வலியுறுத்தத் தொடங்கியிருக்கின்றன.

கடந்த வாரம் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகாவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசியபோது, தீர்வுத் திட்ட சட்டவரைவை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்க முன்னர் தங்கள் பார்வைக்குத் தர வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியதாகவும்—

ஆனால் இந்தக் கோரிக்கைக்கு திட்டவட்டமான பதில் எதையும் தராமல், ஜனாதிபதி மழுப்பலாக விடை கூறி சமாளித்ததாகவும் தமிழ்க்கட்சிகள் தெரிவித்தன.

தமது பார்வைக்கு சட்டவரைவைத் தராமலேயே அதனை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்க ஜனாதிபதி முடிவு செய்துவிட்டார் என சில தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் கூறினர்.

இவ்வாறு அரசு நடந்துகொண்டால் உரிய பதில் நடவடிக்கைகளை நாம் எடுப்போம் என்றும் அப்பிரதிநிதிகளில் சிலர் தெரிவித்தனர்.

(உ)

# வெளிநாட்டுப் பிரஜையும் 2 தமிழர்களும் கைது!

## தாண்டிக்குளத்தில் சம்பவம்

கொழும்பு, டிச. 19

வெளிநாட்டு அரச சார்பற்ற தொண்டு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவரும் அவருடன் சேர்ந்து வந்த இரு தமிழர்களும் கடந்த வாரம் தாண்டிக்குளம் ஊடாக கிளிநொச்சி வர முயன்ற சமயம் படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெளிநாட்டுப்பிரஜையிடம் கையடக்கமான 'பக்ஸ்' இயந்திரம் ஒன்றும், வீடியோ கமரா செட் ஒன்றும் இருந்தாகக் கூறப்பட்டது.

இந்த மூவரும் மேல் விசாரணைக்காக கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# கிளிநொச்சியிலும் திரவப் பணம் இல்லை

சாவகச்சேரி, டிச. 19

கிளிநொச்சி மாவட்டத்தில் திரவப் பணத்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பல்வேறு அரச நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஓய்வூதியக் கொடுப்பனவு, அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் அவசர தேவைகள் போன்றவற்றுக்காக கிளிநொச்சி அரச அதிபரால் கோரப்பட்ட ஐந்து கோடி ரூபா திரவப்பணத்தை கிளிநொச்சிக்கு எடுத்து வர அனுமதி வழங்காததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# போர் தமிழருக்கு எதிரானதல்ல என்ற நம்பகத்தன்மையை இழக்கும் நிலை

## விரைவில் வரலாம் என்கிறார் அரச எம். பி

கொழும்பு, டிச. 19

இன்று நடைபெறும் போர் புலிகளுக்கு எதிரானதே தவிர தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்ற கூற்றின் நம்பகத்தன்மையை நாம் விரைவில் இழக்கும் நிலை ஏற்படக் கூடும்.

—இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார் பொது மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பியான பற்றி வீரக்கோன்.

நிதி கொள்கைத் திட்டமிடல் இனவிவகார தேசிய நல்லிணக்க அமைச்சின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது சிங்கள நாடும், சிங்கள அரசாங்கமுமே; சகல தமிழர்களும் பயங்கரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுகின்றனர்—என்ற உணர்வை தமிழ்மக்கள் மனதில் பதிய வைப்பதே விடுதலைப் புலிகளின் உபாயமாகும். ஆனால் அரச அதிகாரத்தில் உள்ளவர்களும் அதனுடன் தொடர்புடையோரும் தமிழ் மக்களை இந்நிலைக்குத் தள்ளி விடுகின்றனர்.

நாட்டில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்று நான் கூறவில்லை. இது தொடர்பாக பொலீஸார் சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அவசியம். ஆனால் இந்த வேலை புத்தி சாதுரியமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே நான் கூறுகிறேன்.

—இவ்வாறு பற்றி வீரக்கோன் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

## தொடரும் போர்

சிங்களவன் ஆமிக்காரன் எங்கள் சீமையில்
செல்லடிச்சு குண்டு போட்டான் பயந்து ஓடினோம்
அங்கு நாங்கள் இல்லை என்று அறிந்து
கொண்டபின்
ஆடம்பரமாகக் கோட்டை முற்றம் ஏறியே
சிங்கக் கொடியை ஏற்றினானாம் படத்தில்
காட்டினார்
சிவப்புத் தோட்டம் நின்று அங்கு கோலை
ஆட்டினார்
அம்போ என்ற ஆமிக்காரர் அணிவகுத்தனர்
அயலார் நாட்டைப் பிடித்தது போல் பறை
முழக்கினர்.

இப்போவென்ன வென்றாலெம்மை
வரவழைக்கிறார்
இவங்க ஆள நாங்களங்கு வாழ வேண்டுமாம்
தப்போ தவறோ செய்திடாமல் தங்க வேண்டுமாம்
தருவதனை உண்டுறங்கிக் கிடக்க வேண்டுமாம்
அப்புகாமித் துரைக்கு அடிமைத் தொண்டு
செய்வதில்
ஆனந்தமாயிருந்து நாங்கள் காலந் தள்ளலாம்
''எப்புடிம்மா என்னாலாகும்'' மகனும்
கேட்கிறான்
இவனுக் கெதைச் சொல்ல! அவனும் போர்
தொடுக்கிறான்

—தில்லைச்சிவன்

# இளைஞரை படையில் கட்டாயமாக சேர்ப்பதற்கு தொண்டமான் எதிர்ப்பு

கொழும்பு, டிச. 19

இளைஞர்களை இராணுவத்துக்கு கட்டாயமாகச் சேர்க்கும் திட்டத்தை அமைச்சர் தொண்டமான் எதிர்ப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையில் தொண்டமானைத் தவிர ஏனையோர் எவரும் இத்திட்டத்தை எதிர்க்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட அமைச்சரவை உப குழு ஒன்று 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களை இராணுவத்துக்கு கட்டாயமாகச் சேர்க்கும் திட்டமொன்றை அமைச்சரவைக்கு சிபாரிசு செய்திருப்பது தெரிந்ததே.

இது தொடர்பான தமது கருத்தை எழுத்தில் தருமாறு தொண்டமானை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா [illegible] தாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இல்லாத பகுதியை வைத்திருந்தால் கிழமைக்கு ஒரு தரமாவது புலிகள் தாக்குவர்

## தமிழர் மனதை வென்றவரே உண்மையில் யுத்தத்தில் வென்றவர்

விமானப்படையின் முன்னாள் தளபதி ஹரி குணத்திலக்க சமீபத்தில் 'யுக்திய' சிங்கள வார இதழுக்கு அளித்த பேட்டியை 'சரிநிகர்' மறுபிரசுரம் செய்திருந்தது. ஹரி குணத்திலக்க அளித்த பேட்டி கேள்வி — பதில் வடிவில் கீழே தரப்பட்டுள்ளது'

கேள்வி:- யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கை, பருவ மழைக் காலத்திற்குப் பின்னரே ஆரம்பிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் அந்நடவடிக்கை வெற்றி அளிக்கும் என இதற்கு முன் அளித்த பேட்டியில் கூறியிருந்தீர்கள். ஆனால் இன்று உங்கள் கூற்று பிழையானதாக மாறியுள்ளதே?

பதில்:- இல்லை. நான் அதை ஏற்றுக்கொள்ளமாட்டேன். இந்த இராணுவ நடவடிக்கை மார்ச் மாதத்திற்கு பின் தான் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். மக்கள் இல்லாத வெற்றுப் பிரதேசங்களையே இராணுவத்தினர் இப்பேரது கைப்பற்றியுள்ளனர். இவ்வாறான பிரதேசத்தைக் கைப்பற்றுவதால் ஏற்படும் பிரயோசனம் என்ன? ஆயிரம் புலிகள் வரை யாழ். நகரில் அடைபட்டு உள்ளனர் என இராணுவம் கூறுகிறது. இது பொய். அவர்கள் அவ்வாறு நகருள் ஒளிந்திருப்பதற்கான காரணம், இராணுவத்தை உள்ளே வரவழைத்துக்கொண்டு அதன் பின் தாக்குவதற்கே ஆகும்.

கேள்வி:- எனது கேள்விக்குரிய பதில் கிடைக்கவில்லை. இராணுவப் பேச்சாளர்கூட அண்மையில் ''ரிவிரெச'' (சூரியப்பிரகாசம்) நடவடிக்கை தொடர்பான எதிர்வு கூறல்கள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுவிட்டன எனக் கூறியிருந்தாரே?

பதில்:- ''ரிவிரெச'' நடவடிக்கை தொடங்கி 50 நாட்களுக்கும் மேலாகின்றது. இதுவரை ஒரு புலி உறுப்பினரைக் கூட படையினரால் கைது செய்ய முடியவில்லை. சரணடைய கூறிய அறிக்கைகளினாலும் எந்தவித பலாபலனும் கிடைக்கவில்லை. இராணுவத்தினரிடம் இருந்து புலிகள் கைப்பற்றிய 4 படகுகள், 3 யுத்த டாங்கிகள், விமானப்படைக்கு ஏவுகணைத் தாக்குதல் தொடுக்கும் மத்திய நிலையம் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க இந் நடவடிக்கையினால் முடியவில்லை. இருபதினாயிரம் இராணுவத்தினர் இரண்டு பிரிவுகளாக நடவடிக்கையை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில், புலிகள் பின்வாங்குவது சாதாரண ஒரு செயலாகும். இருபதினாயிரம் வீரர்களுக்கு முகம்கொடுக்க பிரபாகரன் தீர்மானித்தால், அவர் சித்தசுவாதீனம் அற்றவர் என்றே கூறவேண்டும். இராணுவத்தினர் உட்பிரவேசிக்க புலிகள் அனுமதியளித்தனர். அதேபோலவே புலிகளால் மக்கள் அனைவரும் அப்பிரதேசத்திலிருந்து அகற்றப்பட்டனர். இது அரசாங்கத்தால் எதிர்பார்க்கப்படாத நிகழ்வு அல்ல.

''ரிவிரெச'' நடவடிக்கை பலாலியிலிருந்து இரு பிரிவு வீரர்களினால் தொடங்கப்பட்டது. இந்த இரு பிரிவினரும் பலாலி - யாழ். வரை இரண்டு கிலோ மீற்றர் பரப்புக்கொண்ட பிரதேசத்தையே கைப்பற்றினர். குடாநாட்டின் மற்றப் பிரதேசங்கள் இன்னும் புலிகள் வசமே உள்ளன. அதனால்த்தான் விமானப்படையினரின் விமானங்கள் ஏவுகணைத் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாகின்றன. இவ்வாறு பிரதேசங்களை கைப்பற்றுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லையென்பது எனது அபிப்பிராயமாகும். இராணுவம் கைப்பற்ற வேண்டியது முழு குடாநாட்டையும் அன்றி இரண்டு கரைகளை அல்ல.

கேள்வி:- ''ரிவிரெச'' நடவடிக்கையின் இறுதிக்கட்டமாக, யாழ். நகரம் ராணுவ வசமாகியுள்ளது. இவ்வாறான மக்களற்ற வெற்றிடப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதில் இராணுவத்தின் உண்மையான வெற்றி தங்கியுள்ளதா?

பதில்:- இது முக்கியமான கேள்வி. இதுதான் இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் இருக்கும் மிகப்பெரிய பிரச்சினை. இவ்விருதரப்பினருக்கும், நெருக்கடி காலமாக இக்காலகட்டம் அமையப் போகின்றது. எனது அபிப்பிராயத்தின்படி மக்கள் சூனியப்பிரதேசத்தை கைப்பற்றுவதில் எந்தவித பயனும் இல்லை.

இன்று யாழ். மக்கள், அகதிகள் நிலையில் உள்ளனர். புனருத்தாரண அமைச்சருக்கு உண்மையான அகதிகளின் எண்ணிக்கை தெரியாவிட்டாலும் முழு உலகத்தாருக்கும் அகதிகள் எண்ணிக்கை 3 அல்லது 4 லட்சம் என்பது தெரியும். யாழ். மக்களால் எந்த நாளும் அகதிகளாக வாழ முடியாது. அவர்களுக்கும் தம்மைப் பற்றிய உயர்ந்த எண்ணம் காணப்படவே செய்யும்.

அவர்கள் அகதிமுகாமில் அகதிகளாக வாழவிரும்ப மாட்டார்கள். தமிழ்க்கட்சிகள் கூறுவதுபோல் அவர்களுக்கு சொந்த இடங்களில் வாழவசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் யாழ். நகரை கைப்பற்றிவிட்டதால் அங்கிருந்து இராணுவத்தினரை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் மக்கள் அங்கு மீளக் குடியேற முடியும்.

கேள்வி:- நீங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தினரை அகற்றிட வேண்டும் என்றீர்கள். இந்தச் செயலுக்கு அழுத்தம் கொடுக்கும் காரணிகளை கூற முடியுமா?

பதில்:- ஆம். நான் முன்னர் கூறியது போல யாழ். மக்களை அகதிகளாக வைத்துக் கொண்டு தீர்வுகாண முடியாது. யுத்தமாயையினுள் சிக்கியிருக்கும் சிங்கள மக்கள் நான் கூறுவதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இருப்பினும் உண்மையை தெளிவுறுத்த வேண்டியது எனது கடமை.

இரண்டாவது, மக்களை அகதிகளாக வைத்திருப்பது இலங்கை அரசாங்கத்திற்கு கெடுதலாகவே அமையும், ஏனெனில் யுத்தத்திற்கு ஆதரது அளிக்கும் சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் நம்மை எதிர்க்க முற்படும்.

மூன்றாவது போரில் மரணமடைந்த வீரர்கள் எண்ணிக்கை, மற்றது எதிர்காலத்தில் தாக்குதலுக்கும் உள்ளாகும் வீரர்களது நிலைமை என்பன தொடர்பானது. சென்ற பன்னிரண்டு வருட ஐ. தே. க. ஆட்சியின் போது கொல்லப்பட்ட வீரர்களது எண்ணிக்கை 4,200. பொது [illegible] அரசாங்கத்தின் [illegible] மாதகால ஆட்சியில் கொல்லப்பட்ட வீரர்களது எண்ணிக்கை 1,100.

'ரிவிரெச' நடவடிக்கையில் இராணுவத்தரப்பினரில் 500 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் சூனியப்பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றிக் கொண்டு இருக்க நினைத்தால் கிழமைக்கு ஒருதரமாவது புலிகளின் கெரில்லா தாக்குதலுக்கு உள்ளாகும். கெரில்லாத் தாக்குதல்களினால் இராணுவத்தினருக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்படலாம். இதுதான் நான்காணும் யதார்த்தம்.

யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடியை ஏற்றுவதன் மூலம் பிரச்சினைகள் தீர்ந்து விடுவதில்லை. கொடி ஏற்றுவது இன்றைக்கோ நாளைக்கோ விழுந்து விடும்நிலையில் என்றால், அதுதேசியக் கொடிக்குச் செய்யும் அவமானமாகும். யாழ் மக்களின் மனதை வென்றவர்களே உண்மையில் யுத்தத்தில் வென்றவர்களாவர்.

கேள்வி:- உங்கள் கருத்தின்படி 'ரிவிரெச' நடவடிக்கை ஊடாக யாழ். நகரைக் கைப்பற்றி அதிகரத்தை நிலைநாட்டுதல் சிறப்பாக நடைபெறவில்லை என்பது தெளிவாகின்றது. அப்படியெனில் இவ்வாறான உயிரிழப்புக்களோடு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் அர்த்தம் என்ன?

பதில்:- நான் இதற்கு முன்பு கூறியது போல் இந்நாட்டில் யுத்தம் மேற்கொள்ளப்படுவது கீழ்த்தர அரசியல் லாபத்தை பெற்றுக்கொள்ளவாகும். தேசியக்கொடியை ஏற்றி சாதாரண வெற்றியைப் பெறவே 'ரிவிரெச' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அரசியல் தலைவர்களுக்கு எப்படியாவது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு அல்லவெனநினைக்கின்றேன். ஏனெனில் அவர்தான் தமிழ் மக்களின் ஆதரவை பெற்றுக்கொண்டு பேச்சுவார்த்தையை வடக்குக்கு கொண்டு சென்றவர். ஆனால் அவர் இன்று யுத்தவாதிகளின் பொறிக்குள் சிக்கிவிட்டார்.

அதுபோலவே சிங்கள இனவாதிகளின் பண்டிதர்களான நளின் டி சில்வா, காமினி ஜயசூரிய, எஸ். எல். குணசேகர, மாதுளுவாவ சோபித தேரர் ஆகியோர் யுத்தம் வேண்டும் என குரல் கொடுக்கின்றனர். இவர்களின் பொறிக்குள் ஜனாதிபதி அகப்பட்டு விட்டார். அதனால்தான் அரசுக்கு ஆதரவளிக்கும் தமிழ்க் கட்சிகளை கூட அவர் சந்திக்கத் தயக்கம் காட்டி வருகிறார். அவரின் நிலையைக் கண்டு நான் கவலைப்படுகிறேன். ஆனால் இதுதான் உண்மை.

(5 ஆம் பக்கம் பார்க்க)


## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆங்கில, தமிழ் தட்டச்சு யந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், தையல் மெஷின், TV, Deck, போன்ற மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள். விளம்பரதாரர் C/o நாகேந்திரம், கெருடாவில் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதி, கெருடாவில், சாவகச்சேரி.

(89541)

புதிய நிலையிலுள்ள வீல் செயர் (Wheel chair) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் தின்சுவை வெதுப்பகம், துறைமுக வீதி, பருத்தித்துறை. (39540)

### ஜோதிடம்

மாவை விநாயகர் ஜோதிடம், அதிர்ஷ்டம் அழைக்கிறது. உங்கள் ஜாதக பலன் சரியாகக் கூறப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம், பகல் 12.00 மணி வரை. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலடி, கரவெட்டி கிழக்கு. பிற்பகல் நெல்லண்டை ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் பிரதம குரு இல்லத்திலும் சந்திக்கலாம்.

(39539)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவீன சந்தையில் இயங்கிவந்த ''ராசி சில்க்ஸ்'' தற்போது கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (C/3053)

## நத்தார் பண்டிகையை முன்னிட்டு

## மலிவு விற்பனை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள

**பாட்டா ஏஜென்ஸி ஸ்தாபனம்**

சிறுவர் முதல் பெரியோர் வரை உள்ள சகல தோல் பாதணிகளும்

கொழும்பு விலைக்கே பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். காலணி விற்பனை நிலையம்

கொடிகாமம் புகையிரத நிலையம் முன்றல்
கண்டி ரோட்,
கொடிகாமம்.

(39645)



## அறிவித்தல்

யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தில் கடன் பெற்று ஒழுங்காக மீளச் செலுத்தாது தடவை தப்பியுள்ள சங்கங்களுக்கு வழங்கும் சேமிப்பிற்கான வட்டியைத், தடவை தப்பிய கடன்களுக்காக ஈடுசெய்வதென 17.12.95 ஆம் திகதியை சமாச நிர்வாக சபை தீர்மானித்துள்ளது. இதற்கமைய சங்கங்கள் 31.12.95 ற்கு முன்னதாக தடவை தப்பிய கடன்களை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. தவறின் சேமிப்பு வட்டியிலிருந்து கடன்களுக்காக ஈடு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

பதில் மாவட்டச் செயலாளர்.


## 31 - ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
02
—
10
—
1920



மறைவு:
19
—
11
—
1995

### அமரர் காசியர் இளையதம்பி

*[அரச ஒப்பந்தகாரர்]*

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காசியர் இளையதம்பியின் அந்தியேட்டிக் கிரியை மட்டுவில் வடக்கில் இருக்கும் மகன் இ. கணேசலிங்கத்தின் இல்லத்தில் இன்று [19-12-95] நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

[39538]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## அரசியல், ராணுவ ரீதியில் தோல்வி

''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கை மூலம் படையினர் கைப்பற்றி உள்ள பகுதிகளில் பொதுமக்கள் இல்லை. இப்படியான பகுதிகளை படையினர் வைத்திருப்பது ஆபத்து.

இப்படி விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரி குணத்திலக்க சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மக்கள் வசிக்காத பகுதிகளில் கெரில்லாத் தாக்குதல் நடத்துவது புலிகளுக்கு வாய்ப்பாக இருக்கும். படையினர் இவ்வாறான பகுதிகளைத் தொடர்ந்து வைத்திருக்க முயன்றால் கிழமைக்கு ஒருதரமாவது புலிகளின் தாக்குதலுக்கு படையினர் இலக்காகலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் படையினருக்குப் பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்திய ராணுவ நடவடிக்கை ''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கை ஆகும். அதன் முதல் கட்டம் பூர்த்தி அடைந்து விட்டதாக அரசாங்கம் கூறுகிறது. அடுத்த கட்டத்துக்கான திட்டங்கள் ஏற்கனவே தீட்டப்பட்டுவிட்டன என்றும் அரசாங்கம் தெரிவிக்கிறது.

பல்லாயிரக்கணக்கான படையினரைத் திரட்டி இந்த ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோதே படையினரின் ''வெற்றி'' எதிர்பார்க்கப்பட்டதுதான்.

ஆனால் படையினர் ஈட்டிய ''வெற்றி'' கோட்டைப்பகுதியில் சிங்கக் கொடியை ஏற்றியது மட்டும்தான். இதனைத் தற்போது தெற்கில் பலரும் ஏற்றுக்கொண்டு விட்டனர்.

இந்த நிகழ்வும் ஒரு நாடு இன்னொரு நாட்டைப் பிடித்ததுபோன்று பெரும் எடுப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

யாழ்ப்பாணத்தை 'வெற்றி' கொண்டது சம்பந்தமான பிரகடனத்தை பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கும் வைபவம் கூட நடத்தப்பட்டது.

ஆனால் படையினர் ஈட்டிய ''வெற்றி'' நிரந்தரமானது அல்ல. இதனை விமானப் படையின் முன்னாள் தளபதி தனது பேட்டியில் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் பிடியில் இருந்து யாழ்ப்பாண மக்களை மீட்பதற்கே இந்த ராணுவ நடவடிக்கை என்று சந்திரிகா ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் மக்கள் இல்லாத பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு தற்போது பெரும் ''வெற்றி'' என்கிறார். மக்களை விடுவிப்பதற்கே ராணுவ நடவடிக்கை என்றால் மக்கள் இல்லாத பகுதிகளைக் கைப்பற்றிவிட்டு பின்னர் வெற்றி என்று சொல்ல முடியுமா?

சிங்கள பேரினவாதிகளது பொறிக்குள் விழுந்துள்ள சந்திரிகா யதார்த்த நிலையை உணரத் தவறிவிட்டார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த இடங்களைவிட்டு ஏதிலிகளாக வெளியேற வழி வகுத்தது ''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கை.

ஆனால் மக்கள் வெளியேறியது மூலம் சந்திரிகாவுக்கு பெரும் அரசியல் ரீதியாகத் தோல்வி ஏற்பட்டது தற்போது ராணுவ ரீதியிலும் பெரும் தோல்வி ஏற்பட அதுவே வழி வகுக்கவும் போகிறது.

## மீட்புநிதிக் கடன் மீளல் நேர அட்டவணை

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு நடைபெறும் இடங்கள் குறித்த நேர அட்டவணையை விடுதலைப் புலிகள் நிதித்துறை விடுத்துள்ளது

அட்டவணை வருமாறு:-

| | | |
|---|---|---|
| **06 - 01 - 1996 சனிக்கிழமை** | | |
| சாவகச்சேரி | — | டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. மு.ப. 9-00 — மு.ப 12-00 வரை |
| சாவகச்சேரி<br>பச்சிலைப்பள்ளி | — ] | திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கொடிகாமம் பி.ப. 2-00 — பி.ப. 4-00 வரை |
| **07 - 01 - 1996 ஞாயிற்றுக்கிழமை** | | |
| பருத்தித்துறை<br>வடமராட்சி கிழக்கு | — ] | வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை. மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை |
| கரவெட்டி | — | திருஇருதயக் கல்லூரி' நெல்லியடி. பி.ப 2-00 — பி.ப. 4-00 வரை |
| **08 - 01 - 1996 திங்கட்கிழமை** | | |
| நல்லூர் | — | டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை |
| உடுவில் | — | பி.ப. 2-00 — பி.ப. 5-00 வரை |
| **09 - 01 - 96 செவ்வாய்க்கிழமை** | | |
| கோப்பாய் | — | டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை |
| தெல்லிப்பளை | — | பி.ப. 2-00 — பி.ப. 5-00 வரை |
| **10 - 01 - 1996 புதன்கிழமை** | | |
| யாழ்ப்பாணம் | — | டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை |
| மானிப்பாய் | — | பி.ப. 2-00 — பி ப. 5-00 வரை |
| **11 - 01 - 1996 வியாழக்கிழமை** | | |
| சங்கானை | — | டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி, மு.ப. 9-00 — மு.ப. 12-00 வரை |
| காரைநகர்<br>வேலணை | — ] | பி.ப. 2-00 — பி.ப. 5-00 வரை |

## பதவி விலகிய ஹமீத்துக்கு ஐ.நாவில் உயர் பதவி?

கொழும்பு, டிச. 19

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து இராஜினாமச் செய்துள்ள முன்னாள் அமைச்சர் ஏ.ஸி. எஸ். ஹமீத் ஐக்கிய நாடுகள் சபையில் உயர்ந்த பதவி ஒன்றைப் பெற்றுக் கொள்வார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

தவிசாளர் பதவியை இராஜினாமாச் செய்த பின்னர் தற்போது மருத்துவ சோதனைக்காக லண்டனில் தங்கியிருக்கும் ஹமீத், சிறிது காலம் ஓய்வு எடுத்து விட்டு பின்பு ஐ.நா. சபையில் ஓர் உயர்ந்த பதவியை ஏற்றுக் கொள்வார் எனக் கூறப்படுகின்றது

உதல் சுகவீனம் காரணமாகவே ஐ.தே.க தவிசாளர் பதவியைத் தம்மால் தொடர்ந்து வகிக்க முடியாதிருப்பதாக தமது ராஜினாமாக் கடிதத்தில் ஹமீத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஸ்ரீலங்காவின் வெளியுறவு அமைச்சராக இருந்த ஹமீத்துக்கு ஐ. நா. சபை மற்றும் சர்வதேச ராஜதந்திர வட்டாரங்களுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஐ. நா. சபையில் உயர்ந்த பதவி ஒன்றை ஹமீத் ஏற்பார் என்ற செய்தியை இங்கு நாட்டில் உள்ள அவரது உறவினர்கள் வெறும் வதந்தி என்று மறுத்துள்ளனர். (உ)

## மக்கள் இல்லாத....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி: அரசாங்கத்தின் யுத்தப் பிரவேசம் காரணமாக, சமாதானத்துக்கான அவகாசம் கலைந்து விடுகின்றதா?

பதில்: ஆம் அரசாங்கம் உருவாக்கிய யுத்தப் பிரசாரங்களில் இறுதி நிலை இதுதான். இனவாதிகளின் குரல்கள் காரணமாக சாதாரண பொதுமக்கள் கூட இந்நிலையை அடைந்து விடுவர். அதேபோல் யாழ். மக்களை தமது வசிப்பிடங்களுக்கு வரவிட அரசு தயாராகாவிடின் சமாதானம் வெகுதூரம் சென்று விடும்.

கேள்வி: மூன்றாவது ஈழ யுத்தம் ஆரம்பித்தது தொடக்கம் இன்று வரை விமானப் படையைச் சேர்ந்த ஏழு விமானங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன. இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம்?

பதில்: விமானிகளின் தவறினால் விமானம் விபத்துக்குள்ளாகியதென்றால் விமானிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். தொழில் நுட்பக் கோளாறினால் இரண்டு விமானங்கள் விபத்துக்குள்ளாகியிருந்தால் விமானங்கள் இனி நன்கு பரீட்சிக்கப்பட வேண்டும். இவை ஒன்றைக் கூடச் செய்யாமல் குறைந்தது விமானம் எங்கு விழுந்தது என்று கூடத் தெரியாமல், தொழில் நுட்பப் பிழையும், விமானியின் கவனயீனமும் தான் விபத்துக்கு காரணம் என்கின்றனர். இது விமான மோட்டிகளுக்கு செய்யும் அவமானமாகும். அத்தோடு இவ்வாறு கூறுவது உலக மகா பொய்.

## வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

சாவகச்சேரி, டிச. 19

கிழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விலாசதாரர்களை தமக்குரிய அடையாள ஆவணங்களுடன் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வருகைதருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ திருமதி குணசீலி சூசைப்பிள்ளை — மே/பா. யோசப் இராசநாயகம், அகதி முகாம், மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

★ கே. பராசக்தி — ''அருளகம்'', உசன், மிருசுவில்.

★ வி. நவரத்தினம் (பவா)— மே/பா.கே. செல்லத்துரை, மணியம் தோட்டம், மந்துவில்.

★ கோபின்றோ மோலா கார்த்திகேசு— மே/பா. எஸ். முத்துத்தம்பி, 190, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

★ ஐ. கந்தலிங்கம் — மருதம்புலம், கைதடி பாடசாலைக்கு அருகில்.

★ என். யோகலிங்கம் — மறவன்புலவு, சாவகச்சேரி.

★ யோகராணி ரவீந்திரன் — மே/பா. கே. செல்லையா, விக்கினேஸ்வரா வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.

★ பா. யோகேஸ்வரி — ''இரத்தினசோதி'' மீசாலை வடக்கு, மீசாலை.

★ திருமதி செல்வம் அம்பிகா — மீசாலை வடக்கு, கொடிகாமம்.

★ எஸ். குணராசா — மே/பா. எஸ். கோபி, 183/1, மீசாலை வடக்கு, மீசாலை.

★ புஸ்பலதா— மே/பா. திருமதி ஜே. ரவீந்திரன் பபா, இரண்டாம் குறுக்குத்தெரு, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ முருகேசு சிவசம்பு — தாமோதரம் வீதி, சாவகச்சேரி.

★ குமாரசாமி சிவலிங்கம் — மட்டு. அம்மன் கோவில் வீதி, சாவகச்சேரி வடக்கு.

★ திருமதி இரத்தினமலர் திருவிளங்கம் அல்லது எஸ். கணேசு — மே/பா. ராமு, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ பேராயிரம்பிள்ளை வேற்பிள்ளை அல்லது தவமலர் வேற்பிள்ளை — மே/பா. சரவணமுத்து குகநாதன், ''அன்னை இல்லம்'', மட்டுவில் தெற்கு, மட்டுவில்.

★ சிவராஜேஸ்வரி ரமணநாதன் — குறுஸ்டியன் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

கீழே குறிப்பிடப்படும் விலாசதாரர்கள் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் தமிழீழ வைப்பகத்துக்குச் சமுகமளிக்குமாறு நிதித்துறை கேட்டுள்ளது.

★ பாக்கியம் இராமலிங்கம் — தபால் நிலையம், மூளாய் தெற்கு, சுழிபுரம்.

★ திருமதி கனகபூரணம் குழந்தைவேல் — சுன்னாகம்.

★ ஏனெஸ் காணிக்கை – 58, டேவிட் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ நாகம்மா பொன்னுத்துரை—இல. 22, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ கந்தையா முருகையா — புதிய மருந்துக்கடை வீதி, வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டை.

★ திருமதி றோசாமலர் சதாசிவம்—தம்பாளை, அச்சுவேலி.

★ திருமதி ஜெயராணி மகாலிங்கம் — இல. 2, திருமகள் வீதி, அரியாலை மத்தி, யாழ்ப்பாணம்.

★ திரு. திருமதி சிவானந்தம் பேரின்பநாதன் — 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ நா. கணவதிப்பிள்ளை — கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

★ எஸ். வேலாயுதபிள்ளை—17/1, ரயில் நிலைய வீதி, சுண்டிக்குளி.

★ வேலுப்பிள்ளை சிவசம்பு — ஏழாலை கிழக்கு, ஏழாலை.

★ செல்லத்துரை வரன் — நவக்கிரி, புத்தூர்

★ மகேஸ்வரி மதியாபரணம் — வோட்டஸ் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

★ இராசையா நவரட்ணராஜா—'சரிமங்களம்', கொக்குவில் மேற்கு.

★ த. சிவபாதசுந்தரம் — வளாக வீதி, திருநெல்வேலி தெற்கு.

★ கே. எஸ். தேவசுந்தரலிங்கம் — நாகலிங்கம் வீதி. கொக்குவில் மேற்கு.

★ வசுமதி சர்வேஸ்வர சர்மா — ''ஸ்கந்த புஸ்பகரணி'', மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம்.

★ நல்லதம்பி இராசரட்ணம் அல்லது பரமேஸ்வரி — இல. 50 நாவலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ சரவணமுத்து லோகநாதன்—பலாலி கிழக்கு, பலாலி.

★ வேலுப்பிள்ளை கைலேஸ்வரன் — சேச் வீதி, கொக்குவில் கிழக்கு.

★ வல்லிபுரம் பொன்னுத்துரை—பூதர்மட வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

★ வல்லிபுரம் ஐயாத்துரை — பூதர்மடம் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

★ இராசலிங்கம் ஞானாம்பிகை அல்லது இராசலிங்கம் ஜெகதாம்பிகை — இல. 46, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

★ ஏ. சூசைப்பிள்ளை — உயரப்புலம், ஆனைக்கோட்டை.

★ திருமதி எல். எம். சூசைப்பிள்ளை — 124, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணஅறிவித்தல்கள்

## திருமதி ஹரியற் அமிர்தம்மா நவரட்ணம்

திருமதி ஹரியற் அமிர்தம்மா நவரட்ணம் 18 - 12 - 95 அன்று காலமானார். இவர் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட V.N. நவரட்ணம் ஹன்ற் அவர்களின் அன்பு மனைவியும், நொத்தாரிசு சின்னத்தம்புவின் மகளும், நல்லம்மா சோமசுந்தரம் [சுவிஸ்], செல்வநாயகம் ஹன்ட் [Supt of M. C. கொழும்பு], குணராஜா ஹன்ட், [Supt. Port Authority கொழும்பு], செல்வராஜா ஹன்ட் [பிரதம வருமான பரிசோதகர், யாழ். மாநகர சபை, யாழ்ப்பாணம்], Dr.ஜெயராஜா ஹன்ட் [ஜேர்மனி], திருமதி றோசம்மா பாலச்சந்திரன் [உடுவில்], செல்வி மகிழம்மா ஹன்ட் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். இவரது நல்லடக்க ஆராதனை இன்று 19 - 12 - 95 பிற்பகல் 2 மணிக்கு திரு. M. தர்மரட்ணம், பூதவராயர் கோவிலடி, துன்னாலை தெற்கு, கரவெட்டி என்ற விலாசத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டைவேலி மெதடிஸ்த தேவாலய திருச்சபை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வராஜா ஹன்ட்
[மகன்]

பூதவராயர் கோவிலடி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

[39544]

## சின்னத்தம்பி சபாபதிப்பிள்ளை

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சபாபதிப்பிள்ளை [திங்கள்] 18-12-95ல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் கணவரும். காலஞ்சென்ற வல்லிபுரநாதன் (பிரதம பொறியியலாளர்), காலஞ்சென்ற சரஸ்வதி (அச்சுவேலி), திரவியம் (கறாஜ் உரிமையாளர், சாவகச்சேரி), மகேஸ்வரி [ஆவரங்கால்], பரமேஸ்வரி [சாவகச்சேரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி [நியூசிலாந்து], இராசதுரை (அச்சுவேலி), நகுலாம்பிகை [சாவகச்சேரி], மோகனசெல்வம் (ஆவரங்கால்], சிவானந்தம் (ஆனந்தன் கறாஜ் உரிமையாளர், சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சிவசுந்தரம் [சாவகச்சேரி], செல்லத்துரை (அம்பாள் மோட்டர்ஸ், ஆவரங்கால்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நல்லபிள்ளை, ச. நடராசா [ஆவரங்கால்] ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-12-95 திங்கட்கிழமை சாவகச்சேரி, கண்ணாடிப் பிட்டி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. திரவியம்
[மகன்]
நா. சிவாநந்தம்
[மருமகன்]

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(39648]

## செல்வநாயகம் பத்மநாதன்
(காவலாளி, யாழ். போதனா வைத்தியசாலை)

பருத்தித்துறை நாகலிங்கமுதலி ஒழுங்கையைச் சேர்ந்த செல்வநாயகம் பத்மநாதன் நேற்று (18.12.95) அதிகாலை காலமாகிவிட்டார்.

இவர் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரன், மனோகரன், உதயராணி, உமாலினி, உசாந்தினி, உதயபிரியா, செல்வகுமார், செல்வேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி (ஆசிரியை, உடுத்துறை ம. வி.), கிருபைநாதன் (புலோலி ப.நோ.கூ.சங்கம்), அற்புதராணி (ஆசிரியை, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), திரவியநாதன் (களஞ்சியப் பொறுப்பாளர், ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கரப்பிள்ளை (அதிபர், உடுத்துறை ம.வி.), அன்னபூரணம், புவனேந்திரன் (ஆசிரியர்), பரமேஸ்வரி, காலஞ்சென்ற சீவரத்தினம், தாமோதரம்பிள்ளை, தங்கரத்தினம், சிதம்பரலிங்கம் (இ.போ.ச. நடத்துனர்), சுந்தரலிங்கம் (இ போ.ச. சாரதி), யோகேஸ்வரி, தங்கவேலாயுதம், சொர்ணலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-12-95) பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்

இத்தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. திரவியநாதன்
(சகோதரன்)

நாகலிங்கமுதலி ஒழுங்கை,
பருத்தித்துறை

(39551)

# மேலும் மரண அறிவித்தல் இரண்டாம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கிலுள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 19-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஸ்ரீலங்கா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜவஹர்லால் விளையாட்டரங்கை நெருங்கிச் செல்ல முயன்ற வேளை பொலீஸார் அதனைத் தடுத்து நிறுத்தினர்.

பேரணிக்கு தலைமை வகித்துச் சென்ற வை. கோபாலசாமி உட்பட பல நூற்றுக் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

முன்னாள் அ. அ. தி. மு.க. அமைச்சர்களான திருநாவுக்கரசு, எஸ். ஆர். ராதா ஆகியோரும் கைதானவர்களில் அடங்குவர்.

# மரண அறிவித்தல்

## ஜேம்ஸ் பஸ்ரியாம்பிள்ளை

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வு, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட ஜேம்ஸ் பஸ்ரியாம்பிள்ளை (இளைப்பாறிய காட்டு இலாகா உத்தியோகத்தர்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி பஸ்ரியாம்பிள்ளை (ஆயுள்வேத வைத்தியர்) அவர்களின் மகனும், காலஞ்சென்ற எலிசபெத்தின் கணவரும், தேவா (பிரான்ஸ்), பபி ஆகியோரின் தந்தையும், ஜீவரட்ணம் (பொறியியலாளர் (K. K. S. சீமெந்துக்கூட்டுத்தாபனம்), வனஜா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், ஜீன், ஷியாமி, பிரதீப் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், முத்துநாயகம், காலஞ்சென்றவர்களான ஜோன், பயஸ், நோயல், ராஜன், போல், மணி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அன்னாரது தற்காலிக இல்லத்தில் இருந்து (19 . 12 . 95) இன்று காலை 10 மணியளவில் புலோலி சூசையப்பர் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஜீவரட்ணம்
(மருமகன்)

தற்காலிக முகவரி:
C/o S. சிவலோகநாதன்,
மாவில் வீதி,
புற்றளை,
புலோலி தெற்கு,
புலோலி.

(39544)

## பொன்னுத்துரை சத்தியமூர்த்தி
(சண்முகநாதன்)

காரைநகர் பத்தாகேணியடியைச் சேர்ந்த பொன்னுத்துரை சத்தியமூர்த்தி [சண்முகநாதன்] அவர்கள் 18 - 12 - 95 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பென்னுத்துரை - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், சிவமனோரதியின் அன்புக் கணவரும், செந்தில்நாதன், சிவநாதன், சத்தியரூபி, குகநாதன், கமலநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிறிஸ்ணமூர்த்தி, துரைராஜா, மற்றும் காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரவணமுத்து சிவக்கொழுந்துவின் அன்பு மருமகனும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் கற்குழி சாவகச்சேரியில் இடம்பெற்று தகனக்கிரியைகள் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் 18 - 12 - 95இல் இடம்பெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
(சிவமனோரதி)

தற்போதய முகவரி:
[illegible]
கற்குழி,
சாவகச்சேரி.

(39545)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை கந்தையா
(மலாயன் பென்சனர், உடுவில்

மல்வம். உடுவிலைச் சேர்ந்த மலாயன் பென்சனர் வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (18- 12- 95) காலை காலமானார்.

அன்னார் பத்மநாதன (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் பெருந்தெருக்கள் திணைக்களம்), காலஞ்சென்ற சோமசுந்தரம், Dr. ஜெயலிங்கம் (நீர் கொழும்பு), ஸ்ரீகந்தா (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), பத்மினிதேவி, லலிதாதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசலிங்கம் (Rt- C. O.). கனகசபாபதி (C. T. B. கணக்குப்பகுதி, கோண்டாவில்), சிவலிங்கம் (கனடா), புஸ்பராணி, மகேஸ்வரி, ஞானேஸ்வரி (ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18- 12- 95 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கரவெட்டி சோணப்பு மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
தி. கனகசபாபதி
(மருமகன்)

விலாசம்:
தி. கனகசபாபதி,
C/o க. பொன்னையா,
சோணப்பு வீதி,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(39543)

## தம்பு நாகராசா கனகாம்பிகை

9/1, வெள்ளாந்தெருவைச் சேர்ந்த தம்பு நாகராசாவின் (நாகராஜேஸ்வரி மோட்டோர்ஸ் — உரிமையாளர் சிவலிங்கப்புளியடி) அன்பு மனைவி கனகாம்பிகை (ராசாத்தி) 18 - 12 - 95 அன்று காலமாகிவிட்டார். இவர் மல்லிகா, விஜயரட்ணம் (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவன்), ரேணுகா (தட்டெழுத்தாளர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி), விஜயமோகன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சிங்கராசா (சவூதி)வின் மாமியாரும், காலஞ்சென்ற குமாரசாமி, அன்னலெட்சுமி, கற்பகவல்லி ஆகியோரின் சகோதரியும். கபில்ராஜ், கிருஷிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (19 - 12 - 95) பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று கெற்பலி தென்பி மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. நாகராசா

சு. சடாட்சரம்,
நிமால் வீதி,
கெற்பலி.

(39553)

## சிவபாக்கியம் தம்பு

சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாக கொண்ட காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் வேலுப்பிள்ளை தம்புவின் துணைவி சிவபாக்கியம் தம்பு நேற்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சரவணபவன், காலஞ்சென்ற பரமசிவம், மற்றும் மகாசிவம் ஆகியோரின் அன்புத் தாயாரும், உமாவதியின் மாமியாரும், அருள்நிதி, குணநிதி, வாசுகி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (19.12-95) இன்று வல்லிபுரம் வீதி, மந்திகையிலுள்ள Dr. ராமச்சந்திரனின் இல்லத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கினறோம்.

தகவல்:-
மகாசிவம்
(மகன்)

வல்லிபுரம் வீதி,
மந்திகை.

(39550)

## திருமதி சிவசம்பு சரஸ்வதி
(இணுவில்)

இணுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி சிவசம்பு சரஸ்வதி 17- 12- 95 (ஞாயிற்றுக்கிழமை) காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் நாகநாதர் சிவசம்பு அவர்களின் அன்பு மனைவியும் இராசேஸ்வரி, பஞ்சாட்சரம் (அதிபர் யாழ்/ மல்வத்தை றோமன் கத்தோலிக்க பாடசாலை உடுவில்), இராசலிங்கம், பரராசசேகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நா. குலசிங்கம் (சுவிஸ்), அற்புதராணி பரமேஸ்வரி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், கணதர்சினி (சுவிஸ்), சிவதர்சினி, கமலதர்சினி, லாவண்யா, அரிசுதன், உமேசன், அனிதா, கபிலன், பிரபாஷினி, விதூரசகன், பிரகாஷ், சூரி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் (18- 12- 95) நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பஞ்சாட்சரம்
(மகன்)

தற்காலிக முகவரி:
வ. குமாரசாமி
மருதடி வீதி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

(39552)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org